இந்துசமய அறநிலையத்துறை

# ‘யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2016

## தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்.

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org

நாள் 15.01.2016

யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் காலை நடைபயிற்சி முடித்த யானைகள் செயற்கை நீர் தூவலில் ஆனந்த குளியலிட்டு மகிழ்ந்த பின்னர் காலை ஊட்டச்சத்து உணவு உண்டு மகிழ்ந்தன.

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு, கோவை இணை ஆணையர் அவர்கள் முன்னிலையில் முகாமில் பங்கேற்றுள்ள 30 யானைகளும், அலங்கரிக்கப்பட்டு வரிசையாக நிற்க வைத்து சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன. புதுபானையில் புத்தரிசியிட்டு பொங்கல் வைக்கப்பட்டது. பொங்கல் பொங்கிய போது முகாமில் கூடியிருந்த யானைகள் பிளிறி அவற்றின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தின. யானைகளுக்கு பொங்கல், பழம் மற்றும் கரும்புகள் வழங்கப்பட்டன.

யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் யானை பாகன்களுக்கான விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு இணை ஆணையர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். மாலையில் அனைத்து யானைகளும் நடைபயிற்சி மேற்கொண்டு ஊட்டச்சத்து உணவு உண்டு பசுந்தீவனங்களுடன் தத்தம் இருப்பிடங்களுக்கு திரும்பின.



